Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)
(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~குந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082827
C 05/AC/2025

1. District : கள்ளக்குறிச்சி
மாவட்டம்
PS: இ.கு.க.பிரிவு கள்ளக்குறிச்சி
காவல்நிலையம்
Year: 2025 ஆண்டு
FIR No.: முத.அ. எண்
Date: 25.11.2025 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended by the PC Act (Amendment) Act 2018
Sections பிரிவுகள்: 7, 12 r/w 7
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள் 25.11.2025
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 12.45 மணி
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.11.2025
Time : நேரம் 21.30 Hrs
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II 25.11.2025
Time : நேரம் 21.30 Hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கு 30 கி.மீ. திருக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
வட்டார போக்குவரத்து அலுவலகம், உளுந்தூர்பேட்டை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் க. சத்தியராஜ்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. கலியமூர்த்தி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1989
(d) Nationality : நாட்டினம் இந்தியர்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் கண்காணிப்பாளர்
(g) Address : முகவரி இடைநிலை நிலை கண்காணிப்பு பிரிவு அலுவலகம் கள்ளக்குறிச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. நெடுஞ்செழிய பாண்டியன், வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம். 2. திரு. இதயகுமார் (முகவர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form - 91 மூலம் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பின்னர் அனுப்பப்படுகிறது.

இபறம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25/11/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

25/11/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

25.11.2025

Name: பெயர் K. பாண்டியராஜ்

Rank: நிலை .....No. என் .....

காவல் முதல் நிலைக் காவலர்
இ.த.க. பிரிவு, கலெக்டரேட்.

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.05/AC/2025 u/s 07, 12 r/w 07 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்காண்காணிப்பாளர் ஆகிய நான் 25.11.2025-ந்தேதி மதியம் 12.45 மணிக்கு உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையை தொடர்ந்து, மதியம் சுமார் 12.45 மணி முதல் இரவு சுமர் 20.00 மணி வரை உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் தயாரிக்கப்பட்ட நடடிவக்கைகள் அடிப்படையில் 25.11.2025 ஆம் தேதி இரவு 21.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/AC/2025 u/s 07, 12 r/w 07 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

இன்று 25.11.2025 ஆம் தேதி, காலை சுமார் 10.00 மணியளவில், கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பளராகிய நான் பணியில் இருந்தபோது, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்கள் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலர் (RTO) மற்றும் அலுவலக ஊழியர்களை சந்தித்து பணம் கொடுக்க போவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி அவர்களை தொடர்பு கொண்ட போது அவர்கள் கடலூரில் வேறு பணியில் இருப்பதாக தெரிவித்ததாலும், நேரம் குறைவாக இருப்பதாலும், உயர் அதிகாரிகளின் உத்தரவு படி மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யும் பொருட்டு, அரசு சாட்சிகளாக விசாரணைக்கு உதவியாக இருக்க அவர்களின் உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, அலுவலகம் வந்திருந்த மேற்படி அரசு சாட்சிகள் இருவரையும் அழைத்துக்கொண்டு, காவல் குழுவினருடன் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 12.00 மணிக்கு அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 12.45 மணிளவில் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் நுழைந்தபோது, மேற்படி அலுவலக பிரதான நுழைவு வாயிலில் TN 19AK2525 என்ற பதிவென் கொண்ட வெளிற் ஊதா நிறத்திலான மாருதி எர்டிகா கார் ஒன்று சந்தேகிக்கும் வகையில் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தை விட்டு வெளியே செல்ல முற்பட்டது, சந்தேகத்தின் அடிப்படையில் அரசு சாட்சிகளுடன் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பிரதான நுழைவு வாயிலில் மேற்படி வாகனத்தை நிறுத்தி, எங்களை முறையாக அறிமுகம் செய்து

கொண்டு விசாரணைசெய்தபோது காரை இயக்கி வந்த நபர் இது RTO Car என்றும், வெளியே செல்வதாகவும் தெரிவித்து பின் முன்னுக்கு பின் முரனாக பதற்றத்துடன் பதிலலித்தார். எனவே மேற்படி வாகனத்தை உளுந்தூர்பேட்டை வாட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு திருப்பி செலுத்தசொன்னபோது மேற்படி நபர் வாகனத்தை இயக்க மறுத்தார். எனவே மேற்படி நபரை காரினுள் அமரசெய்து காவல் ஆளினர் ஒருவரை இயக்க செய்து மேற்படி வாகனத்தை உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடத்திற்கு முன்பு நிறுத்தி அதற்கு பாதுகாப்பு போடப்பட்டது. பின்னர் மேற்படி வாகன ஓட்டுனரை உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் முகப்பறையில் அமரவைக்கப்பட்டார். அதனை தொடர்ந்து மதியம் சுமார் 13.00 மணிக்கு வடக்கு பார்த்து அமைந்து இருக்கும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது என்னையும் எனது காவல் குழுவினரையும் கண்ட சிலர் அலுவலகத்தை விட்டு செல்ல முற்பட்டனர். அப்போது நான் அலுவலகத்தின் முகப்பு வாசல் கதவை என்னுடன் வந்த காவல் குழுவினரை மூடச்சொன்னேன். அப்போது நான் அலுவலகத்தில் இருந்து செல்ல முற்பட்டவர்களை, அரசு சாட்சிகள் முன்னிலையில் அலுவலகத்தின் முன் ஹாலில் உட்காரவைத்து விட்டு, காவலர்களை நியமித்தேன். நானும், இதர காவல் குழுவினரும், அரசு சாட்சிகளும் அலுவலகத்தின் உள்ளே சென்றோம். ஹாலின் தென்புறம் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்கு சென்றோம். அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தான் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலர் கு.நெடுஞ்செழிய பாண்டியன் என்று சொன்னார். அவரிடம் என்னையும், காவல் குழுவினர் மற்றும் அரசுசாட்சிகளையும் எங்களது அடையாள அட்டை காண்பித்து அறிமுகம் செய்து கொண்டோம். பின்னர் அவரை பற்றி விசாரிக்க தன் பெயர் கு.நெடுஞ்செழிய பாண்டியன் வயது 52/2025 த/பெ குருசாமி என்றும், தான் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலராக கடந்த 10.02.2025 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தான் தற்காலிகமாக பிரியா சவுண்டு சர்வீஸ் (மாடியில்) விருத்தாசலம் சாலை, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் என்ற முகரிவயில் வசித்து வருவதாக சொன்னார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை வட்டார போக்கு வரத்து அலுவலர் திரு.கு.நெடுஞ்செழியபாண்டியன் அவர்கள் முன்னிலையில், நான், காவல்குழுவினர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் எங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அவரது அறையை சோதனை செய்ததில் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் ரூ.770/- இருந்தது. அதை பற்றி விசாரிக்க அவர் தனது சொந்த பயன்பாட்டிற்காக வைத்திருப்பதாக கூறியதால் மேற்படி பணம் ரூ.770/- அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ பொருளோ ஏதும் இல்லை. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு நேர் எதிரே உள்ள பெரிய அறைக்கு நானும், இதர காவல்

குழுவினரும் மற்றும் அரசு சாட்சிகளும் சென்று அங்கு வரிசையாக மேஜை போட்டு கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க, தனது பெயர் ரோஜா, வயது 38/2025 அலுவலக உதவியாளர், வீட்டு முகவரி பவளகடை தெரு, வள்ளம்படுக்கை, சிதம்பரம் கடலூர் என்று சொன்னார். அவருக்கு பின்னாடி உள்ள நாற்காலியில் உள்ள நபரை விசாரிக்க தனது பெயர் நர்மதா வயது 42/2025 கண்காணிப்பாளர் வீட்டு முகவரி எண்.35, ஒம்சக்தி நகர், பூங்குனம் அஞ்சல், பண்ருட்டி, கடலூர் என்று சொன்னார். அவருக்கு பின்புற நாற்காலியில் இருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் பெயர் ஜெயஸ்ரீ, இளநிலை உதவியாளர் வீட்டு முகவரி எண்.1/130பி, பிள்ளையார் கோவில் தெரு, சென்னகுணம், கண்டாசிபுரம், விழுப்புரம் மாவட்டம் என்று சொன்னார். அதனை தொடர்ந்து அவருக்கு பின்னால் உள்ள நபரை விசாரிக்க திருமதி.மணிமேகலை, வயது 45/2025 க/பெ பாஸ்கரன், கண்காணிப்பாளர் என்றும் தனது வீட்டு முகவரி முகாம்பிகை தெரு, கோண்டூர், கடலூர் என்று சொன்னார் அவருக்கு பின்புறம் இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் திருமதி.அஞ்சாமணி வயது 27/2025, த/பெ துரைசாமி, தட்டச்சர் தனது வீட்டு முகவரி எண்.3/102, பஜனமேடை தெரு, நாகலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் என்று சொன்னார். பின்னர் அவரது வலது பக்கத்து நாற்காலியில் உள்ள நபரை பற்றி விசாரிக்க தனது பெயர் சையத் சாதிக் வயது 40/2025 உதவியாளர் வீட்டு முகவரி எண்.70/1, 26பி பாகர்ஷா தெரு, விழுப்புரம் மாவட்டம் என்று சொன்னார். மேலும் தான் அமர்திருக்கும் மேஜையைதான் ரமேஷ் பயன்படுத்துவார் என்று சொன்னார். அருகில் இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் ரமேஷ், வயது 53/2025, த/பெ அருணாசலம், உதவியாளர், வீட்டு முகவரி. எண்.28/1, கவிகாலமேட்டுத்தெரு, கடலூர் ஓட்டி என்று சொன்னார். சையத் சாதிக் உதவியாளர் அமர்ந்திருந்த நாற்காலிக்கு சற்று வலது புறம் தள்ளி பின்புறம் இருந்த நபரை பற்றி விசாரிக்க தன் பெயர் வெங்கடேசன், வயது 28/2025, த/பெ அரித்திரன், கணக்கர் என்றும், தனது வீட்டு முகவரி எண். 131/2, மேற்கு தெரு, புக்கிரவாரி, கள்ளக்குறிச்சி மாவட்டம் என்று சொன்னார்.சையத் சாதிக் உதவியாளர் அமர்ந்திருந்த நாற்காலிக்கு முன்னால் இருந்த நாற்காலி காலியாக இருந்ததால் அதை பற்றி விசாரிக்க அது நேர்முக உதவியாளரின் இருக்கை என்றும், அவர் பெயர் திருமதி.மஞ்சுளா வயது 51/2025 க/பெ கோபிநாத் என்றும், அவர் சென்னை கொரட்டூர் என்று தெரிவித்தனர், அவர்களை பற்றி விசாரிக்க மேற்படி நபர் இன்று அலுவலகம் வந்து அனுமதி வாங்கி சென்று விட்டதாக தெரிவித்தனர். மேலும் அலுவலகத்தில் இருந்த வரை விசாரிக்க தனது பெயர் சிவசுப்பிரமணியன் இ.நி.உதவியாளர் என்றும் சொன்னார். பின்னர் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வரவேற்பறையில் காலியாக இருந்த நாற்காலியை பற்றி விசாரிக்க அது விக்டோரியா, வயது 55/2025, க/பெ சந்திரமோகன் பதிவரை எழுத்தர் என்றும் அவரும் இன்றைய தினம் அலுவலகம் வந்து அனுமதி வாங்கி சென்றுவிட்டார் என்று தெரிவித்தனர். அதனை தொடர்ந்து, மேற்படி நபர்களை அவரவர் இருக்கையில் வைத்து பெண் அலுவலர்களை பெண்காவலர்

திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில் திரு.வெங்கடேசனிடம் ரூ.460/-யும், திரு.சையத் சாதிக்கிடம் ரூ.2,200/-யும், திரு.சிவசுப்பிமணியனிடம் ரூ.1500/-யும், திரு.ரமேஷிடம் ரூ.350/-யும், திருமதி.ச.நர்மதாவிடம் ரூ.900/-யும், திருமதி.ரோஜாவிடம் ரூ.300/-யும், திருமதி.து.அஞ்சாமணியிடம் ரூ.1670/- திருமதி.மணிமேகலையிடம் ரூ.500/- யும் மற்றும் ஜெயஸ்ரீயிடம் ரூ.380/- இருந்தது. மேற்படி தொகைகளை பற்றி கேட்க அவைகள் அனைத்தும் தங்களது பயன்பாட்டிற்காக கொண்டு வந்ததாகவும் அவைகளை முறைபடி வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக கூறினார்கள்.அவர்கள் கூறியதை போல் மேற்படி பதிவேட்டில் பதிவுகள் இருந்ததாலும் அவர்கள் கூறும் காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும் அவரவர்களிடமிருந்த பணம் அவர்கள் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த நபர்களை ஒவ்வொருவராக விசாரிக்க தனது பெயர் 1. திரு.பா.பாலகணேஷ், வயது 24/2025, த/பெ பாலகணபதி வீட்டு முகவரி எண்.7/34, மெயின்ரோடு, சரசொள்ளூர், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்றும் தான் தனது கம்பேனி வாகனங்களின் பதிவு தொடர்பாக வந்திருந்ததாக கூறினார். அவரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.5000/- பணம் இருந்தது, பணம் சம்மந்தமாக விசாரித்த போது அவர் தான் சொந்த செலவுக்காக வைத்திருந்தாக கூறியனார். அவர் கூறி காரணம் ஏற்கும் வகையில் இருந்ததால் மேற்படி தொகை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 2, திரு.தமிழரசன், வயது 33/2025, த/பெ வடிவேல் வீட்டு முகவரி எண்.2/33 மாத கோவில் தெரு, வானப்பட்டு, உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் என்றும், தான் டி.வி.எஸ் ரைடர் இருசக்கர வாகனத்திற்கு Fancy Number வாங்குவதற்காக வந்ததாக கூறினார். அவரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.15,000/- பணம் இருந்தது. பணம் சம்மந்தமாக விசாரித்தபோது அவர் தான் சொந்த செலவிற்காகவும், குடும்பசெலவிற்காகவும் வைத்திருந்ததாக சொன்னார். அவர் கூறி காரணம் ஏற்கும் வகையில் இருந்ததால் மேற்படி தொகை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் உளுந்தூர்பேட்டை அலுவலக முகப்பு அறையில் அமரவைக்கப்பட்டிருந்த வெளிர் ஊத நிறத்திலான மாருதி எர்டிக்கா காரின் ஓட்டுனரை சோதனை செய்த போது, அவரிடம் ரூ.7,500/- இருந்தது. பணம் சம்மந்தமாக விசாரித்த போது, RTO-க்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னார். எனவே மேற்படி தொகை ரூ.7,500/- இலஞ்ச பணமாக என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தென்மேற்கு மூளையில் இருந்த புகைபடம் இருக்கும் அறையில் இருந்த திரு.மணிகண்டன் என்பவரை விசாரிக்க அவர் தான் புகைபடம் எடுக்கும் பணி செய்து வருவதாக கூறியனார். மேற்படி நபரையும், அறையையும் சோதனை செய்ததில் அவரிடம் ரூ.1000/- இருந்தது. அதை பற்றி விசாரிக்க, அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதால், மேற்படி தொகை அவரிடமே கொடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுடன் வட்டார போக்குவரத்து அலுவலக அறைகள் சோதனை செய்யப்பட்டது. மேற்படி சோதனையில் வட்டார போக்குவரத்து அலுவலக தென் மேற்கு மற்றும் தென் கிழக்கு மூளையில் இருந்த பதிவரைகளையும், அலுவலகத்தின் மாடி படிக்கு ஒட்டினாற் போல் உள்ள எழுது பொருள் அறையையும் அதற்கு எதிரே உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறையும் சோதனை செய்ததில் சந்தேகம் படும் வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதனை தொடர்ந்து வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் கட்டுபாட்டில் உள்ள TN 32G 0950 மற்றும் TN 06G 2731 ஆன பதிவெண் கொண்ட பொளிரோ மற்றும் ஆல்டோ அரசு வாகனங்களை, அரசு சாட்சிகள் உதவியுடன், வட்டார போக்குவரத்து அலுவலர் முன்னிலையில் சோதனை செய்ததில் சந்தேகம் படும் வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் வட்டார போக்குவரத்து வளாகத்தில் காவல் ஆளினர் பாதுகாப்பு போடப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த வெளிர் ஊத நிறத்திலான TN 19 AK 2525 என்ற பதிவென் கொண்ட மாருதி எர்டிக்கா காரை அரசு சாட்சிகளின் உதவியுடன், வட்டார போக்குவரத்து அலுவலர் முன்னிலையில் சோதனை செய்ததில் மேற்படி வானத்தின் Dash Board-யில் ஒரு புறம் GRT Jewellers என்றும் மற்றொரு புறம் பாதூர் அருள்மிகு ஸ்ரீ ரேனுகாம்பிகை திருக்கோயில் என்று அச்சிடப்பட்டிருந்த துணிபையில் ரூ.1,74,500/- (500X 349) இருந்தது. மேற்படி தொகையை பற்றி அதை ஓட்டிவந்த திரு.உதயகுமார் வசம் கேட்டபோது, வட்டார போக்குவரத்து அலுவலர், உளுந்தூர்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய இரு வட்டாரபோக்கு வரத்து அலுவலகத்திற்கும் பொறுப்பு வகிப்பதால் அங்கு நடைபெறும் அணைத்து விதமான எப்சி, புதியவாகனம் பதிவுசெய்தல் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் இதர வேலைகள் செய்ததற்கான இலஞ்பணம் வட்டார போக்குவரத்து அலுவலரின் உத்தரவுபடி கள்ளக்குறிச்சி சக்ரா ஒட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் இடைதாகர் இரஞ்சித் மூலம் வசூல் செய்யப்பட்டு, தீரன் கொண்டுவந்ததை உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலர் கூறியது போல் அதை பெற்று அவரது மாருதி எர்டிகா வாகனத்தில் வைத்து எடுத்து சென்றபோது அலுவலக நுழைவு வாயில்வைத்து என்னை நிறுத்தி விசாரனை செய்தீர்கள். அப்போது நான் பதட்டமாக இருந்ததால் தங்களிடம் முன்னுக்கு பின் முரனாக பதிலளித்தேன். தற்போது நடந்ததை சொன்னேன். இது தொடர்பாக உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் விசாணை செய்தபோது, மேற்படி வாகனம் தனது தம்பி சுந்தபாண்டியன் அவர்களுக்கு சொந்தமானதென்றும் அதனை தான் தனது சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தி வருவதாகவும், உளுந்தூர்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு நான் தான் வட்டார போக்குவரத்து அலுவலர் என்பதால் இவ்விரண்டு இடத்தில் நடக்கும் அணைத்து விதமான எப்சி, புதியவாகனம் பதிவுசெய்தல் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் இதர வேலைகள் செய்வதற்காக இலஞ்சமாக கள்ளக்குறிச்சி சக்ரா ஒட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும்

இடைதரகர் இரஞ்சித் மூலம் வசூலிக்கபட்ட பணம் என்று சொன்னார். மேலும் மேற்படி இடைதரகர்கர்கள் மற்றும் இதர இடைதரகர்களை பற்றி விசாரனை செய்துபோது, முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்தார். எனவே மேற்படி பணம் இலஞ்சபணம் என்பதால் தொகை ரூ.1,74,500/-ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரனைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் வட்டார போக்கு வரத்து அலுவலர் திரு.நெடுஞ்செழிய பாண்டியன் அவர்களிடம் அலுவலக வருகை பதிவேட்டை கேட்க, அவர் இரண்டு வருகை பதிவேடுகளை எடுத்து ஆஜர் செய்தார், மேற்படி பதிவேட்டில் இன்றைய தினம் அவரது சுருக்கொப்பம் இருந்தது. தொடர்ந்து அலுவலகத்தில் பராமரிக்கபடும் பணம் இருப்பு பதிவேட்டை பற்றி கேட்க, மேற்சொன்ன பணம் கையிருப்பு பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இன்றைய தின அலுவலை பற்றி பதிவுகள் உள்ள பதிவேடுகள் இருப்பின் அவற்றினை ஆஜர் செய்யுமாறு கோரியதற்கு அணைத்து பணிகளும் ஆன்லைன் மூலம் செய்வதால் தனியாக பதிவேடுகள் ஏதும் பராமரிக்கவில்லை என்றும் சொன்னார். எனவே மேற்படி மூன்று பதிவேடுகள் மற்றும் பணம் ரூ.1,82,000/- விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. கொடி நாள் வசூல் குறித்து இவ்வலுவலக கண்காணிப்பாளர் திருமதி.நர்மதா அவர்களிடம் கேட்டபோது, கொடிநாள் வசூல் ஆன்லைன் மூலம் வசூலிப்பதாவும், தனியாக பதிவேடு ஏதும் இவ்வலுவகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பிறகு உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.நெடுஞ்செழியபாண்டியன் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 25.11.2025-ம் தேதி சுமார் 12.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.1,82,000/- ஆனது, எப்சி, புதிய வாகனம் பதிவு செய்தல் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் இதர வேலைகள் செய்ததற்கான இலஞ்ச பணத்தை இடைதரகர்கள் மூலம் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.நெடுஞ்செழிய பாண்டியன் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த தனிநபர் திரு.உதயகுமார் ஆகியோர் வசூலித்தற்கான முகாந்திரம் இருப்பதால், கனம் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி உத்தரவு பெற்று எதிரி திரு.கு.நெடுஞ்செழிய பாண்டியன், வயது 52/2025, த/பெ குருசாமி, வட்டார போக்குவரத்து அலுவலர்,

உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் திரு.உதயகுமார்,வயது 50/2025, த/பெ கேசவன், தனி நபர், பாத்திமா நகர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆகியோர் மீது 25.11.2025 ஆம் தேதி 21.30 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/AC/2025 u/s 07, 12 r/w 07 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல் முறை நடவடிக்கையின் அசல், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்பமை முதன்மை அமர்வு நீதிபதி கள்ளக்குறிச்சி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

25/11/2025

(க.சத்தியராஜ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கள்ளக்குறிச்சி